## FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM I

8069885

C

1. District : VELLORE
   மாவட்டம்
   PS: VIGILANCE & ANTI – CORRUPTION, VELLORE
   காவல்நிலையம்
   Year: 2020
   ஆண்டு
   FIR No.: 8/2020
   மு.த.அ. எண்
   Date 19.10.2020.
   நாள்

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION ACT 1988 as amended by P.C. (Amendment) Act 2018.
   Sections பிரிவுகள்: 7(a) OF P.C. Act 1988 as amended by the P.C. (Amendment) Act 2018.
   (ii) Act சட்டம்:
   Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:
   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
   குற்ற நிகழ்வு நாள்
   Date from : —
   நாள் முதல்
   Date to : 14.10.2020 and 17.10.2020
   நாள் வரை

   Time Period :
   நேர அளவு
   Time from :
   நேரம் முதல்
   Time to :
   நேரம் வரை

   (b) Information Received at PS. Date : 19.10.2020
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
   Time : 6.30 hrs.
   நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) VOLUME - II 2020
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
   Time : 6.30 hrs.
   நேரம்

4. Type of Information : Written/ Oral : TAMIL TYPED COMPLAINT
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: NORTH EAST DIRECTION - 15 KMS
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number :
   முறைக் காவல் எண்
   (b) Address : OFFICE OF THE ASST. EXE. ENGINEER, TANGEDCO, KARNAMPET, KATPADI, VELLORE.
   முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —
   District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : B. RISHIKESH
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
   (b) Father's/ Husband's Name : BALU
   தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 25 Years
   நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : INDIAN
   நாட்டினம்
   (e) Passport No. :
   வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue :
   வழங்கப்பட்ட நாள்
   Place of Issue :
   வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : OWN BUSINESS
   தொழில்
   (g) Address : No. 2/89, MELANDAI STREET, LALAPETTAI, RANIPET DISTRICT.
   முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. KARTHIKEYAN, ASST. EXECUTIVE ENGINEER, TANGEDCO, KARNAMPET, KATPADI, VELLORE DISTRICT.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   "NO DELAY"

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPERATE SHEET ATTACHED

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank …………………. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

B. Reshikha. 19-10-2020 | S. Vijayalakshmi 19/10/20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 19.10.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 8.30 hrs.

Name: பெயர் S. VIJAYALAKSHMI,
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண் ………
VIGILANCE & ANTI-CORRUPTION
VELLORE.

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> இன்று 19.10.2020-ஆம் தேதி 06.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேலொப்பம் செய்து கொடுத்த திரு.B. ரிஷிகேஷ், த/பெ. பாலு, எண்.2/89, மேலாண்டை தெரு, லாலாப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவரின் புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: 19.10.2020 அனுப்புநர் B.ரிஷிகேஷ், த/பெ. பாலு, எண்.2/89, மேலாண்டை தெரு, லாலாப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் , லஞ்ச ஒழிப்பு துறை, வேலூர், வேலூர் மாவட்டம். அம்மா, என் பெயர் ரிஷிகேஷ் நான் டிப்ளமோ மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்துள்ளேன். தற்சமயம் நான் லாலாப்பேட்டையில் ஸ்ரீவாரி 3D வால் பிரிண்டிங் என்ற பெயரில் Wall Designer தொழில் சொந்தமாக செய்து வருகிறேன். என் அப்பா பெயர் பாலு. அம்மா பெயர் பேபி. எனக்கு ஒரு தம்பியும் தங்கையும் உள்ளனர். எனக்கு இன்னும் திருமணமாகவில்லை. எங்களுக்கு என்னுடைய அம்மாவின் பெயரில் சுமார் ஒரு ஏக்கர் நிலம் வள்ளிமலை அருகில் உள்ள சோமநாதபுரம் கிராமத்தில் உள்ளது. அந்த நிலத்தில் கடந்த இரண்டு வருடஙகளுக்கு முன்பு போர்வெல் போட்டோம். அந்த நிலத்திற்கு விவசாய பாசனத்திற்காக இலவச மின் இணைப்பு பெற கடந்த 2019-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் காட்பாடி மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்தேன். பின்னர் இலவச மின் இணைப்பு கிடைக்க மிகவும் தாமதம் ஆகும் என்ற காரணத்தினால் நான் எங்களுடைய விண்ணப்பத்தை தட்கல் திட்டத்தின் கீழ் மாற்றி கொள்ள விண்ணப்பித்தேன். பின்னர் கடந்த அக்டோபர் மாதம் 01-ஆம் தேதி மேற்படி இலவச மின் இணைப்பிற்காக கொடுத்த விண்ணப்பத்தினை தட்கல் திட்டத்தின் கீழ் மாற்றி கொள்ள வேண்டுமென்றால் வி.ஏ.ஓ. சர்டிபிகேட் வாங்கி கொண்டு காட்பாடி மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திற்கு வருமாறு சொன்னார்கள். நானும் வி.ஏ.ஓ. சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு காட்பாடி மின் வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று அங்கு ஒரு அலுவலரை பார்த்தேன். அவர் 5 HP மோட்டார் பொருத்த வேண்டுமென்றால் ரூ.2,50,000/-க்கு டிமாண்ட் டிராப்ட் எடுத்து கொண்டு வந்து தருமாறு சொன்னார். பின்னர், நானும் அவ்வாறே கடந்த 06.10.2020-ஆம் தேதி ரூ.2,50,000/-க்கு டி.டி. எடுத்துக்கொண்டு சென்று காட்பாடி மின் வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் கொடுத்தேன். அதற்கான ஒப்புகை சான்றினை என்னிடம் கொடுத்துவிட்டு, மின் வாரிய அலுவலகத்தில் இருந்து உங்களை தொடர்பு கொள்வார்கள் என்று சொல்லி அனுப்பினார்கள். அதேபோல மின்வாரிய அலுவலகத்தில் இருந்து கடந்த 11.10.2020-ஆம் தேதியன்று கமர்ஷியல் இன்ஸ்பெக்டரும், இன்னொருவரும்

எங்களுடைய நிலத்திற்கு வந்து ஆய்வு செய்தார்கள். அப்போது என்னுடன் என்னுடைய அம்மா பேபியும் இருந்தார்கள். அவர்கள் எங்களுடைய நிலத்தை பார்வையிட்டு, நான் ஏற்கனவே காட்பாடி மின் வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் எனக்கு கொடுத்திருந்த ஒப்புகை சான்றின் நகல் மற்றும் டி.டி.யின் நகலினை வாங்கிக்கொண்டு, A.D. மற்றும் J.E. வந்து நிலத்தை ஆய்வு செய்வார்கள் என்று சொல்லிவிட்டு போனார்கள். கடந்த 14.10.2020-ஆம் தேதியன்று மின் வாரிய அலுவலகத்தில் இருந்து எனக்கு போன் செய்து எங்களுடைய நிலத்தை இன்று ஆய்வு செய்ய கார்ணாம்பட்டு A.D. கார்த்திகேயன் என்பவர் வருவதாகவும், அதனால் அங்கு என்னை நிலத்தில் இருக்குமாறு சொன்னார்கள். அதேபோல நானும் எங்களுடைய நிலத்தில் இருந்தபோது பகல் சுமார் 3.45 மணிக்கு A.D., J.E. மற்றும் மூன்று பேர்கள் எங்களுடைய நிலத்திற்கு வந்து ஆய்வு செய்தார்கள். பின்னர், கார்ணாம்பட்டு A.D. கார்த்திகேயன் அவர்கள் என்னுடைய தோளின் மேலே கையை போட்டுக்கொண்டு சிறிது தூரம் நிலத்தில் அழைத்து சென்று, எங்களுடைய நிலத்திற்கு தட்கலில் மின் இணைப்பு கொடுக்க ரூ.20,000/- கொடுக்க வேண்டும் என்று சொன்னார். உடனே நான் ஏற்கனவே ரூ.2,50,000/-ஐ டி.டி. கட்டிவிட்டேன் சார் என்று சொன்னேன். அதற்கு அவர் உனக்கு நான் உடனே மின் இணைப்பு தர வேண்டுமென்றால் என்னுடைய செலவிற்கு தனியாக ரூ.20,000/- தர வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் சார் நாங்க ஏழைபட்டவர்கள் கொஞ்சம் பார்த்து சொல்லுங்க சார் என்று சொன்னதற்கு, அவர் நீ வீட்டிற்கு போய் வீட்டில் உள்ளவர்களிடம் கலந்து பேசி விட்டு இரண்டு நாள் கழித்து வந்து என்னை பார் என்று சொல்லிவிட்டு போய்விட்டார். நானும் வீட்டிற்கு போய் அம்மா அப்பாவிடம் பேசினேன். அவர்கள் அவ்வளவு பணம் நம்மால் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். மறுபடியும் நான் 17.10.2020-ஆம் தேதியன்று மதியம் சுமார் 12.45 மணிக்கு கார்ணாம்பட்டு மின் வாரிய அலுவலகத்திற்கு போய் அங்கு A.E. ஆபீசில் உட்கார்ந்திருந்த A.D கார்த்திகேயன் அவர்களை போய் பார்த்தேன். அப்போது அவர் என்னை தனியாக கூட்டிச்சென்று நான் கேட்ட பணம் ரூ.20,000/- கொண்டு வந்தாயா என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் சார் பார்த்து சொல்லுங்க நாங்க கஷ்டத்தில் இருக்கிறோம் என்று சொன்னதற்கு, அவர் அதெல்லாம் எனக்கு தேவையில்லை என்று சொல்லி சிறிது யோசித்துவிட்டு சரி ரூ.10,000/- கொடு என்று சொன்னார். நான் மீண்டும் அவரிடம் கெஞ்சி கேட்க, அவர் சரி ரூ.7,000/- கொடு உன்னுடைய வேலையை முடித்து விடலாம் என்று சொல்லி, 19.10.2020-ஆம் தேதி பணத்துடன் வந்து பார்க்குமாறு சொல்லி அனுப்பினார். எனக்கு கார்ணாம்பட்டு A.D. கார்த்திகேயன் அவர்கள் கேட்ட ரூ.7,000/-ஐ லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லை. எனவே, கார்ணாம்பட்டு மின் வாரிய அலுவலகத்தில் A.D. ஆக பணிபுரியும் கார்த்திகேயன் கேட்ட லஞ்ச பணம்

ரூ.7,000/-ஐ அவருக்கு நான் கொடுக்கும்போது அவரை பிடித்து சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் ரூ.2,50,000/-க்கான டி.டி. நகல் மற்றும் காட்பாடி மின் வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் எனக்கு கொடுத்த ஒப்புகை சான்றின் நகலையும் இணைத்துள்ளேன். இப்படிக்கு, Sd/- xxxxxxxxx (B.Rishikesh) இணைப்பு: 1) காட்பாடி மின் வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் கொடுத்த ஒப்புகை சான்றின் நகல். 2) ரூ.2,50,000/-க்கான டி.டி. நகல்

Received the complaint on 19.10.2020 at 06:30 hrs, After due verification, Inspr. Tmt.Vijayalakshmi is to register a case. Sd/- xxxxxxxxxxx (K.S.HEMACHITHRA) 19/10/2020, DSP, DVAC, VLR.

Sir/Madam, Received the complaint on 19-10-2020 at 06.30 hrs after verifying the antecedents of the accused and credibility of the complainant by conducting enquiry on 19.10.2020 at 07.30 hrs registered a case in Vellore V&A.C. Crime No.08/2020 U/s. 7(a) of the PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act, 2018. The FIR in original along with the complaint and its enclosures sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and sent the other copies to the officers concerned. (Sd/- XXXX) 19.10.2020 (S.Vijayalakshmi) Inspector of Police Vigilance and Anti-Corruption Vellore-1.

S.Vijayalakshmi
19/10/20
(S.VIJAYALAKSHMI)
Inspector of Police
Vigilance & Anti Corruption
Vellore.